# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :26 April 2025

கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005,
Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*

## EDITORIAL BOARD


**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின் பிற உரை நுட்பங்கள்**
**முனைவர்.வி.சேகர்**

**தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்**
**கு.செந்தமிழ்செல்வி**

**எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்**
**ஆ.கவிதா**

**சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு**
**மா.மகேஸ்வரி**

**சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு**
**ப. நந்தினி**

**களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்**
**திருமதி.கோ.சரண்யா**

**புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணா ்த்தும் போர்**
**ப.சிவாஜி**

**பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்**
**இரா.தீபலெட்சுமி**

**பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி**
**இரா.ஹேமலதா**

**சிலம்பில் அரசியல்**
**மு.உமாமகேஸ்வரி**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

நன்றி

# அகத்தினுள்


திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்
முனைவர் ச.வைத்தீஸ்வரன்

திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்
முனைவர் ஹ.விஜயலட்சுமி

பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்
ப.பிரபு

திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்
சா.ஜனார்த்தனன்

சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்
திருமதி நா.நித்யா

நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்
கி. ராஜ்குமார்

தர்காவும் விளிம்புநிலை மக்களும்
முனைவர் மௌ.அஸ்கர் அலி

இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்
முனைவர் நா. ஜிதேந்திரன்

சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு
ரா.சந்தியா

ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'
ரா.ஹேமா சிவகா

கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்
இரா.கலாவதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

**இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்**
ந.மஞ்சுளா

**மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்**
பத்மினி. S

**EASY LEARNING TECHNIQUES**
PROF. Dr. Er. S. HARI PRASAD

**Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools**
Kanapathipillai Gnanaretnam

**A Comparative Study Of Formal And Non-formal Education Systems**
Shiyani Thevaruban

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**

**The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu**
P.PRAVEENKUMAR

**Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums**
Dr. S.Udhaya Kumar.

**தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்**
முனைவர் செ. சாந்தி

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்

# *Avatars and Symbols of Lord Vishnu*

கட்டுரையாளர்

சா.ஜனார்த்தனன்

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)

நெறியாளர்

முனைவர். மு.பாலமுருகன்

இணைப்பேராசிரியர்

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை

கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி

திருவண்ணாமலை — 606603

*Research scholer: S. Janarthanan*

*Doctoral Researcher (Part Time)*

*Guide: Dr. M. Balamurgan*

*Associate Professor*

*PG Tamil Department of Research*

*Kalaingar Karunanithi Arts & Science College*

*Tiruvannamalai — 606603*

***Abstract:***

*The gods are the belief of the people's life. God is considered the primary in human life and actions. The life of the Tamil people is also structured around the god. In the first book of the Tamils, Tolkappiyam, Tolkappiyar mentions the place of residence along with the god to refer to the land where the people lived. He mentions Thirumali as the god of the people living in the forest, Muruga as the god of the people living in the mountains, Indriana as the god of the people living in the fields, and Varuna as the god of the people living in the sea. Tolkappiyar says that the people living in the forest belong to the Mullai land, and the god of the Mullai land is Mayon. Thirumal, the god of the Mullai land, has taken ten incarnations. Comments about the incarnations of Thirumal are found in the Sangam literary songs. When the Sangam hymns refer to the incarnations of Lord Thirumal, they use metaphors and comparisons. The hymns of Lord Thirumal present Lord Thirumal as an image before our eyes. When we contemplate the incarnations taken by Lord Thirumal, the creatures of the world and human life take place within them. The incarnations of Lord Thirumal symbolize the origin of the world, the origin of creatures, and the systems of human life. Although the incarnations of Lord Thirumal are mythological stories, the ideas embedded in them are symbols that explain the life of the world and man. This article also discusses the symbols in Lord Thirumal's incarnations.*

**ஆய்வு சுருக்கம் :**

மக்களின் வாழ்வியலின் நம்பிக்கையாகத் தெய்வங்கள் திகழ்கின்றது. மனித வாழ்க்கையிலும், செயல்களிலும் தெய்வமே முதன்மையாகக் கருதப்படுகின்றது. தமிழ் குடிகளின் வாழ்க்கையும் தெய்வத்தினைக் கொண்டே கட்டமைக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் முதல் நூலாகிய தொல்காப்பியத்தில் தொல்காப்பியர் மக்கள் வாழ்ந்த நிலத்தினைக் குறிப்பிடுவதற்குத் தெய்வத்துடன் இணைத்தே வாழ்விடத்தினையும் கூறுகின்றார். காட்டினைச் சார்ந்து வாழும் மக்களின் தெய்வமாகத் திருமாலினையும், மலையினைச் சார்ந்து வாழும் மக்களின் தெய்வமாக முருகனையும், வயலினைச் சார்ந்து வாழும் மக்களின் தெய்வமாக இந்திரணையும், கடலினைச் சார்ந்து வாழும் மக்களின் தெய்வமாக வருணனையும் குறிப்பிடுகின்றார். காட்டினைச் சார்ந்து வாழ்ந்த மக்கள் முல்லை நிலத்திற்குரியவர் என்றும், முல்லை நிலத்தின் தெய்வம் மாயோன் என்றும் தொல்காப்பியர் கூறுகின்றார். முல்லைநிலத் தெய்வமாகிய திருமால் பத்து அவதாரங்கள் எடுத்துள்ளார். திருமாலின் அவதாரங்கள் பற்றிய கருத்துக்கள் சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றது. சங்கப் பாடல்கள் திருமாலின் அவதாரங்களைக் குறிக்கும் பொழுது உவமையாகவும், ஒப்பீடாகவும் எடுத்துரைக்கின்றது. பரிபாடலில் உள்ள திருமாலின் பாடல்கள் திருமாலினை நம் கண்முன் உருவமாகக் காண்பிக்கின்றன. திருமால் எடுத்துள்ள அவதாரங்களை உற்றுநோக்கும் பொழுது உலக உயிரினங்களும் மனித வாழ்க்கையும் அதனுள் இடம்பெறுகின்றது. உலகத்தின் தோற்றம், உயிரினத்தின் தோற்றம், மனித வாழ்க்கையின் அமைப்புகள் ஆகியவற்றை திருமாலின் அவதாரங்கள் குறியீடுகளாக உணர்த்துகின்றன. திருமாலின் அவதாரங்கள் புராணக் கதைகளாக இருப்பினும் அதனுள் பொதிந்துள்ள கருத்துக்கள் உலகத்திற்கும், மனிதனுக்கும் வாழ்வியலை விளக்கும் குறியீடுகளாகவே அமைந்துள்ளது. திருமாலின் அவதாரங்களில் உள்ள குறியீடுகளைக் இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

திறவுச்சொற்கள்: திருமால், அவதாரம், குறியீடு, வைணவம்,பக்தி

**முன்னுரை :**

உலகம் யாவையும் தாமுள வாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் என்று கம்பர் குறிப்பிடுகின்றார். திருமாலின் அவதாரங்கள் உலகத்தோடு ஒன்றிணைந்துள்ளது. நாம் வாழ்கின்ற பூமியானது நீருக்குள் மூழ்கியிருந்தது. காலவெள்ளத்தில் நீர் படிபடியாகக் குறைந்து நிலம் தோன்றியது. முதலில் நீரில் உயிரினங்கள் தோன்றியதனை முதல் அவதாரமாகிய மீன் அவதாரம் குறிக்கின்றது. அதன் பின்னர் நிலத்தில் உயிரினங்கள் தோன்றி வாழ்ந்தது இதற்கு பல்லாயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கலாம். இதனை ஆமை அவதாரம் குறிப்பிடுகின்றது. மீண்டும் கடல்கோளால் இப்பூமி நிரினுள் மூழ்கியது. மீண்டும் நிலமும் நீரும் தோன்றியது. இதனையே வராக அவதாரம் குறிப்பிடுகின்றது. உயிரினங்களில் இருந்து உயிரினமாக மனிதன் தோன்றினான். மனிதனுக்கும் விலங்குக்கும் இடையேயான போராட்டத்தினை நரசிம்ம அவதாரம் குறிப்பிடுகின்றது. மனிதனிடத்து தோன்றிய வேறுபாடுகளையும் உயர்வு தாழ்வுகளையும் வாமன அவதாரம் குறிப்பிடுகின்றது. மனிதன் மனிதனை அழிக்கும் செயலினை பரசுராமர் அவதாரம் குறிப்பிடுகின்றது. மனிதனின் சூழ்ச்சி, பொறாமை, வஞ்சகம், களவு, கற்பு போராட்டம் ஆகியவற்றை இராம அவதாரம் குறிப்பிட்டுகின்றது. நன்மை, தீமை, தர்மம், அதர்மம், நற்செயல், தீயசெயல் ஆகியவற்றை பலராமன் அவதாரம் குறிப்பிடுகின்றது. அறம், பொருள், இன்பமாகிய வாழ்வினில் தர்மம் நிலைத்திருக்கும் அதர்மம் அழிந்திடும் என்பதனை கண்ணன் அவதாரம் குறிப்பிடுகின்றது. உலகத்தின் அழிவினை கல்கி அவதாரம் எடுத்துரைக்கின்றது. திருமாலின் அவதாரங்கள் உலகத்திற்கும் மனிதனுக்கும்,மனிதவாழ்விற்கும் கருத்துகளை எடுத்துரைக்கும் குறியீடுகள் ஆகும். இதனை உணர்ந்து வாழ்க்கையினை அறவழியில் வாழ்வோம்.

**திருமால் எடுத்த அவதாரங்கள் :**

1. மீன் அவதாரம்
2. ஆமை அவதாரம்
3. கேழல் அவதாரம்
4. நரசிம்ம அவதாரம்
5. வாமன அவதாரம்
6. பரசுராமர் அவதாரம்
7. இராமர் அவதாரம்
8. பலராமர் அவதாரம்
9. கண்ணன் அவதாரம்
10. கல்கி அவதாரம் (இனிவரும் காலங்களில்)

இப்பத்து அவதாரங்களும் சங்ககால மக்களிடத்தே காணப்படுகின்றது. சங்ககால மக்களின் வாழ்க்கையையே சங்கப்பாடல்கள் பிரிதிபலிக்கின்றது. சங்கப்பாடல்களிலும் திருமாலின் அவதாரங்கள் பேசப்படுகின்றன. திருமாலின் அவதாரங்களில் உள்ள மனிதவாழ்விற்கான குறியீடுகளைக் காண்போம்.

**மீன் அவதாரம் :**

உலகில் வாழும் உயிரினங்களில் ஒன்றுதான் மீன். மீன் நீரில் வாழும் உயிரினம். உலகத்தின் உயிரினத் தோற்றங்கள் நீரில் இருந்தே உருவாகின்றன. பூமி முழுவதும் நீரால் சூழ்ந்து இருந்திருக்க வேண்டும். நீர் படிபடியாகக் குறைந்து நிலம் தோன்றியிருக்க வேண்டும். இதனை எடுதுரைக்கும் வகையில் இன்றும் உலகில் 71% நீர்ப்பகுதி நிறைந்துள்ளதை நம்மால் காண முடிகின்றது. முதலில் நீர்வாழ் உயிரினங்களே தோன்றியிருக்கும். நீர்வாழ் உயிரினங்களில் அதிகமாகவும் பல்வேறு வகையாகவும் இருப்பது மீன்கள். கடல் என்றாலே மீன்கள் என்றும் கருதுவர். உலகத்தின் முதலும் முடிவும் கடலிடத்தே உள்ளது. இதனைக் குறிக்கும் அவதாரமாகவே மீன் அவதாரம் எடுத்தார். இக்கருத்தினையே மீன் அவதாரத்தின் கதை எடுத்துரைக்கின்றது..

உயிர்களைப் படைக்கும் பிரம்மன் கையில் இருந்த வேதங்களை அயக்ரீவன் என்னும் குதிரை முகம் கொண்ட அரக்கன் தன் யோக சித்தியினால் அந்த வேதங்களைக் களவாடிக் கடலுக்குள் புகுந்து அவற்றை ஒளித்து வைத்துவிட்டான். பிரம்மன் இதனை அறியாமல் ஆழ்ந்து தூங்கிவிட்டார். பிரம்மன் உறங்கியதால் எல்லாக் கடல்களும் பொங்கி எழுந்து மூன்று உலகங்களும் கடல்நீரால் மூழ்கிவிட்டது. பிரம்மன் தூக்கம் கலைந்தது. பிரம்மன் படைப்பதற்கு வேதங்களை நோக்கும் பொழுது அவை இல்லாமல் இருப்பதனைக் கண்டு காக்கும் கடவுளான திருமாலிடம் வேண்டினார். திருமால் மீன் அவதாரம் எடுத்து கடலினுள் மூழ்கினார். மீன் உருவத்தில் இருந்த அயக்ரீவனை அழித்து வேதங்களைப் பிரம்மனிடம் கொடுத்துப் படைத்தல் தொழிலைச் செழிக்கச் செய்தார். உலக உயிரினங்களும் தோன்றியது. மீன் அவதாரம் பற்றி சங்கப்பாடல்கள் குறிப்பிடவில்லை. ஆனால் நீரினிலே முதல் உயிரினம் தோன்றியிருக்கும். கடலால் உயிரினம் வாழும். கடலாலே உயிரினங்கள் அழியும் இதனை மீன் அவதாரம் உணர்த்துகின்றது.

- பூமியின் தோற்றம்
- நீரிலிருந்து நிலம் தோன்றுதல்
- முதல் உயிரினம் நீர்வாழ் உயிரினம் இக்கருத்துக்களை மீன் அவதாரம் குறியீடாக எடுத்துரைக்கின்றது.

**ஆமை அவதாரம் :**

ஆமையானது நீரிலும் வாழும். நிலத்திலும் வாழும் நீர்வாழ் உயிரினங்கள் தோன்றியப் பிறகு நிலவாழ் உயிரினங்கள் தோன்றியிருக்கும். புல், செடி, கொடி, தாவரங்கள் உருவாகியிருக்கும். ஓரறிவு முதல் நான்கறிவு உயிரினங்கள் தோன்றியிருக்கலாம். உலகத்தில் அதிக ஆண்டுகள் வாழும் உயிரினமும் ஆமைதான். இயற்கைச் சீற்றத்தின் தன்மைகளை தாங்கும் தன்மையினை கொண்டது ஆமை. நீரினையும்

நிலத்தினையும் குறிக்கும் அவதாரமாக ஆமை அவதாரம் எடுத்தார். இதனையே ஆமை அவதாரமும் எடுத்துரைக்கின்றது.

அமிழ்தத்தை எடுப்பதற்காக தேவர்கள் கூட்டமும் அசுரர்கள் கூட்டமும் ஒன்று சேர்ந்து மேருமலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். தேவர்கள் பாம்பின் வால் பகுதியையும் அசுரர்கள் பாம்பின் தலைப்பகுதியையும் பிடித்துக் கொண்டு கடைந்தனர். கடையும் போது அசுரர்கள் பிடித்த பாம்பின் தலைப்பகுதி ஆலகாலநஞ்சினைக் கக்கியது. நஞ்சின் வெப்பத்தைப் பொறுக்க முடியாமல் தேவர்களும் அசுரர்களும் வருந்தினர்.பாற்கடலைக் கடைவதைக் கைவிட்டனர்.இதனால் மத்தாகப் பயன்பட்ட மேருமலை நிலைபிறழத் தொடங்கியது. தேவர்கள் திருமாலை வேண்ட ஆமை அவதாரம் கொண்டு மேருமலையைத் தம் முதுகில் தாங்கினார். இக்கருத்தினைப் பரிபாடல்,

**திகழொளி மூந்நீர் கடைந்தகால் வெற்புத்**

**திகழ்பெற வாங்கித்தஞ் சீர்ச்சிரத் தேற்றி**

**மகர மறிகடல் வைத்து நிறுத்திப்**

**புகழ்சால் சிறப்பின் இருதிறத் தோர்க்கும் (பரி.திரட்டு 1:64-67)**

என்று குறிப்பிடுகின்றது. கடலால் ஆழிப்பேரலை ஏற்பட்டு நிலம் பாதிக்கப்பட்டாலும், கடலும், நிலமும் மீண்டும் தன் நிலையினை அடைந்துவிடும். உயிரினங்கள் கடலிலும் நிலத்திலும் தோன்றியவண்ணமிருக்கும். முதலில் நீர் வாழ் உயிரினங்களும் அதன் பின்னர் நிலவாழ் உயிரினங்களும் தோன்றியதை ஆமை அவதாரம் உணர்த்துகின்றது.

- நிலத்தில் உயிரினங்கள் தோன்றுதல்
- நீரிலும், நிலத்திலும் உயிரினங்கள் வாழ்தல்
- வாழ்வியல் ஆரம்பமாகுதல்
- இக்கருத்துகளை ஆமைஅவதாரம் குறியீடாகக் குறிப்பிடுகின்றது.

**கேழல் அவதாரம் :**

கார்மேகத்தினைப் போன்று கருமை நிறத்தினைக் கொண்டது காட்டில் வாழும் கேழல். நிலத்தினில் ஐந்திறவு. ஆறறிவு உயிரினங்களாகிய பறவைகள், விலங்குகள், விலங்கிலிருந்து மனிதர்கள் தோன்றியிருக்கலாம். அனைத்து உயிரினங்களிலும் மேன்மையானவாகவும், பகுத்தறியும் தன்மை கொண்டவனாகவும் மனிதன் திகழ்கிறான். கேழல் அதிக மோப்பச் சக்தியினைக் கொண்டது. நிலத்தினைத் தோன்றி உண்ணக்கூடியது. கேழல் நீரினில் நீந்தும் தன்மை கொண்டது. நிலத்தில் தோன்றிய மனிதன் நிலத்தினைப் பாகுபடுத்தி வாழத் தொடங்கினான். தான் வாழ்கின்ற இடத்திற்கு ஏற்ப நிலங்களைக் கட்டமைத்து வாழத் தொடங்கினான். மனிதன் காட்டிலும், மலையிலும், கடலைச் சார்ந்தும், காட்டினை அழித்து வயலை உருவாக்கியும், வறட்சியில் காய்ந்த இடத்தும் வாழ்ந்து வந்தான். இதனையே பன்றி அவதாரம் குறிப்பிடுகின்றது. கடல் ஆழிப்பேரலையால் நிலத்தினை உருக்குலைத்த பொழுதும் நிலங்கள் மீண்டும் கட்டமைக்கப்பட்டன. கேழல் உருவத்தின் கதையும் இவ்வாறே உள்ளது.

பூமியைக் கவர்ந்து சென்ற இரண்யாட்சன் கடலுக்கடியில் ஒளித்து வைத்தான். பூமியில் படைத்தல் தொழிலைச் செய்ய வேண்டும் என்று எண்ணிய பிரம்மன் திருமாலை நினைந்து வழிப்பட்டார். திருமால் கேழல் அவதாரம் கொண்டு கடலுக்கு அடியில் பாதாள உலகில் இருந்த பூமியை இரண்யாட்சனைக் கொன்று தனது கொம்புகளில் தாங்கி வெளிக் கொணர்ந்தார். பிரம்மன் பூமியில் உயிர்களைப் படைத்தருளினார்.இதனைப் பரிபாடல்,

**ஊழி யாழிக்க ணிருநில முருகெழு**

**கேழலாய் மருப்பி னுழுதோய் (பரி3: 23-24)**

எனவும், பிறிதொரு பாடலில் திருமால் கேழல் வடிவம் கொண்டு கடலில் மூழ்கி இவ்வுலகினை தம் கழுத்தால் தாங்கி மேல் கொண்டு வந்ததை,

**பூருவத்துக் கருவல் கந்தரத்தால்**

**தாங்கியிவ் வுலகந் தந்தடிப் படுத்ததை நடுவண்**

**ஓங்கிய பலர்புகழ் குன்றினோ டொக்கும் (பரி4:22-24)**

என்று குறிப்பிடுகிறது. மேலும் நல்லெழுனியாரும் இக்கருத்தினை,

**நானிலந் துளக்கள முழுமுதல் நாற்றிய**

**பொலம்புனை யிதழணி மணிமடற் பேரணி**

**இலங்கொளி மருப்பிற் களிறு மாகி (பரி13:34-36)**

என்று கேழல் உருவத்தினை குறிப்பிடுகிறார். கீரந்தையார் கேழல் உருவத்தினைக்,

**கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய ஊழி (பரி2:16-17)**

எனப் பெயர் பெற்றதாகக் கூறுகிறார். இப்பொழுது வழக்கில் உள்ள பன்றி, வராகம் என்னும் சொற்களைப் புலவர்கள் குறிப்பிடவில்லை. அவற்றை குறிக்க களிறு, கேழல் என்னும் சொற்களைப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

- நிலத்தில் வாழ்க்கை தோன்றுதல்
- மனிதன்நிலத்தினையும் வாழ்க்கையையும் கட்டமைத்தல்
- மனிதன் நிலங்களை உருவாக்குதல்
- மனிதன் விவசாயம் செய்தல்

இக்கருத்துக்களை கேழல் அவதாரம் குறியீடாக எடுத்துரைக்கின்றது.

**நரசிம்ம அவதாரம் :**

நரன் என்றால் மனிதன். சிம்மம் என்றால் விலங்காகிய சிங்கம். விலங்குகளிடமிருந்து மனிதன் தன்னைக் காத்துத் கொள்வதற்காகப் போராடினான். பின்னர் விலங்குகளைப் பழக்கப்படுத்தி தன்னோடு வாழப் பழகினான். இவ்வாறே மனிதன் ஆடு, மாடு, நாய் போன்ற விலங்குகளைத் தன்னுடன் வாழப்பழகினான். காட்டில் திரியும் விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்தும் கொண்டான். காலப்போக்கில் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள இடைவெளி அதிகரித்தும், தனது நிலப்பரப்பில் தமக்கான எல்லைகளைக் கட்டமைத்தும் வாழத் தொடங்கினான். மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள அச்சத்தினையும், வாழ்க்கையினை காட்டும் வடிவமாக நரசிம்ம அவதாரம் காட்சியளிக்கிறது.

இரணியன் மூவுலகங்களையும் அடிமைப்படுத்தி ஆண்டு வந்தான். இரணியன் மகன் பிரகலாதன். இரணியன் எல்லோரையும் தன்னைத் தெய்வமாக வழிபடச் செய்தான். ஆனால் அவன் மகன் பிரகலாதன் திருமாலைப் போற்றி வணங்கினான். இதனையறிந்த இரணியன் கடும் கோபம் கொண்டு தன் மகனுக்கு பல கொடுமைகளை அளித்தான். அவற்றிலிருந்து பக்தியால் உயிர் பிழைத்தான். மாயோனைக் கொல்லும் பொருட்டு இரணியன் பிரகலாதனிடம் மாயோன் எங்குள்ளான் எனக் கேட்க மாயோன் நரசிம்ம உருவத்தில் தூணில் இருந்து தோன்றி இரணியனின் மார்பினைப் பிளந்துக் கொன்றார். இச்செய்தியினை,

**செயிர்தீர் செங்கட் செல்வ நிற்புகழப்**

**புகைந்த நெஞ்சிற் புலர்ந்த சாந்திற்**

**பிருங்க லாதன் பலபல பிணிபட**

**வலந்துழி, மலர்ந்த நோய்கூர் கூம்பிய நடுக்கத்து**

**அலர்ந்த புகழோன் தாதை யாகலின்**

**இகழ்வோன், இகழா நெஞ்சின னாகநீ யிகழா**

**நன்றா நட்டவ னுறுவரை மார்பிற்**

**படிமதஞ் சாம்ப வொதுங்கி**

**இன்ன லின்னரொ டிடிமுர சியம்ப**

**வெடிபடா வொடிதூட் டடியொடு**

**தடிதடி பலபட வகிர்வாய்த்த வுகிரினை** *(பரி4: 10-21)*

என்று பரிபாடலில் கடுவன் இளவெயினனாரால் பாடப்பட்டுள்ளது.

- விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளுதல்
- மனிதன் மனிதனிடம் வேறுபாடு உருவாகுதல்
- மனிதன் தன்னை உயர்ந்தவனாக எண்ணுதல்
- மனிதன் மற்ற உயிரினங்களை அழித்தல்

ஆகியகருத்துக்களை நரசிம்மஅவதாரம் குறியீடாகக் குறிப்பிடுகின்றது.

**வாமன அவதாரம் :**

மனிதன் மனிதனுக்குள் இருக்கும் வேறுபாட்டினை நீக்கும் அவதாரமாக வாமன அவதாரம் காட்சியளிக்கிறது. மனிதனுக்கு உலகத்தில் தான் மட்டுமே உயர்ந்தவன் என்ற எண்ணம் தோன்றி உலகத்து உயிர்களையும் மற்றவற்றையும் பொருட்படுத்தாமல் தானே எல்லாம் என்ற அகந்தையில் எல்லாவற்றையும் செய்கின்றான். ஆனால் மனிதனை விட ஆகாயம் பெரியது என்னும் மனிதனை விட நிலம் பெரியது என்றும் இவற்றுள் மனிதன் வாழ்கின்றான் என்ற உண்மைப் பொருளை உலகிற்கும் மக்களுக்கும் எடுத்துரைக்கும் வகையில் வாமன அவதாரம் தோற்றமளிக்கிறது.

மாவலி மன்னன் ஒருமுறை உலகை வெல்ல யாகம் ஒன்று நடத்த திட்டமிட்டான். அதனை முறியடிக்கவும் அவனின் ஆணவத்தினை அடக்கவும் திருமால் குள்ளமான மனிதன் வடிவம் கொண்டு தாம் வாழ்வதற்கு மூன்றடி இடம் கேட்டார். மாவலி மன்னன் குள்ளமான மனிதன் என்று நினைந்து உடன்பட்டார். குள்ளமான மனித உருவத்தைத் திருமால் பெரிய உருவமாக்கி ஓரடியால் பூமியையும் ஓரடியால் வானத்தையும் அளந்தார். பிறிதோர் அடிக்கு இடம் இல்லாததால் அம்மன்னன் தலைமீது வைத்து அளந்தார். இதனை,

**கீழே லுலகமு முற்ற வடியினை** எனப் பரிபாடலும்,**(பரி3:20)**

**ஞாலமூன் றடித்தாய்** எனக் கலித்தொகையும்,**(கலி124:1)**

**இருநிலங் கடந்த** எனப் பெரும்பாணாற்றுப்படையும் (பெரும்29)

**நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு**

**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**

**நீர்செல நிமிர்ந்த மாஅல்** **(முல்லைப் 1-3)**

என்று முல்லைப்பாட்டும் குறிப்பிடுகின்றது. திருமால் உலகளந்தபோது அவுணர்கள் அவருக்கு அஞ்சித் தம் இருப்பிடம் பெயர்ந்து ஓடிக் கடலில் ஒளிந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை,

**திணிநிலங் கடந்தக்காற் றிரிந்தயர்ந் தகன்றோடி**

**நின்னஞ்சிக் கடற்பாய்ந்த பிணிநெகிழ் பவிழ்தண்டார்**

**அன்னவர் படவல்லா வவுணர்க்கு முதல்வன் நீ** *(பரி3: 54-56)*

என்று பரிபாடல் குறிப்பிடுகின்றது.

- உலகம் அனைத்து உயிரினத்திற்கும் பொதுவானது
- மனிதனுக்கு மட்டும் இவ்வுலகம் இல்லை
- மனிதனின் எண்ணங்களும் வேறுபாடுகளும்
- மனித சக்திக்கும் மேலான சக்தி ஒன்று உண்டு

என்பதனை வாமன அவதாரம் குறியீடாகக் குறிப்பிடுகின்றது.

**பரசுராமர் அவதாரம் :**

இந்த உலகம் அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது என்பதனை உணர்த்தவே வாமன அவதாரம் எடுத்தார். ஆனால் மனிதன் அதனை ஏற்றுக் கொண்டு வாழவில்லை. விலங்குகளைச் சார்ந்து முதலில் மனிதன் வாழ்ந்தான். மனிதனைச் சார்ந்து வாழ்ந்த விலங்குகளை அழித்தான். பறவைகளை அழித்தான். மனித இனத்தினைப் பெருக்கினான். எங்கும் மனிதன் என்ற நிலைப்பாட்டை உருவாக்கினான்.

**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**

**ஊக்க முடையா னுழை (குறள்594)**

என்ற குறளின்படி மனிதனின் ஆசைகளும், ஆணவமும் வளர்ச்சிப் பெருக்கெடுத்தது. மனிதன் மனிதனையே அழிக்க ஆரம்பித்தான். ஒருவனை ஒருவன் வெட்டிச்சாய்த்தான் மனிதனிடத்து பகை, கோபம், ஆசை அதிகரித்தது. அதனை வேரறுக்கும் உருவமாக பரசுராமர் தோற்றமளிக்கின்றார். மனிதன் மனிதனிடத்து சண்டையிட்டு அழித்துக் கொல்லுதலை பரசுராமர் அவதாரம் குறிக்கின்றது.

சமதக்கினி முனிவருக்கும் ரேணுகாதேவிக்கும் ஐந்து மைந்தர்கள் பிறந்தனர். இவர்களுள் ஐந்தாவது மைந்தனே திருமால் அவதாரமாகிய பரசுராமன் ஆவான். ஒருமுறை கார்த்த வீரியார்ச்சுனன் என்னும் அரசன் தன் படைகளுடன் அருகிலுள்ள சமதக்கினி முனிவரின் ஆசிரமத்தை அடைந்தான். தனக்கும் தன் படையினர்க்கும் உணவு வழங்குமாறு வேண்டினான். சமதக்கினி முனிவர், கேட்டதைக் கொடுக்கும் காமதேனு என்னும் பசுவின் மூலம் அவர்களுடைய பசிப்பிணியைப் போக்கினார். இப்பசுவின் மேன்மையை உணர்ந்த கார்த்த வீரியார்ச்சுனன் முனிவருக்குத் தெரியாமல் பசுவைக் கவர்ந்து சென்றான். முனிவரின் புதல்வர்களுள் ஒருவனாகிய பரசுராமன் கார்த்த வீரியார்ச்சுனன் நாட்டிற்குச் சென்று அவனைக் கொன்று காமதேனு என்னும் அப்பசுவை மீட்டு வந்தான். பரசுராமனின் இச்செயலை அறிந்த சமதக்கினி முனிவர் கொலைப்பாவம் நீங்குமாறு புனித நதிகளில் நீராடித் திரும்புமாறு மகனைப் பணித்தார். பரசுராமன் தந்தையின் ஏவலுக்கிணங்கிப் புனித நதிகளில் நீராடப் புறப்பட்டுச் சென்றான்.

பரசுராமன் புனித நதிகளில் நீராடச் சென்றதையறிந்த கார்த்த வீரியார்ச்சுனனின் புதல்வர்கள் பழிக்குப்பழி வாங்கும் நோக்கத்துடன் சமதக்கினி முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்றனர். வழிபாட்டில் ஈடுபட்டிருந்த முனிவரைக் கொன்றனர். பரசுராமன் புனித நதிகளில் நீராடித் திரும்பியதும் கார்த்தவீரியார்ச்சுனன் புதல்வர்கள் செய்த கொடுஞ் செயல்களைக் கூறி ரேணுகாதேவி உயிர் துறந்தார். பரசுராமன், தம் பெற்றோர்க்குத் தீங்கு விளைத்த அரசர் குலத்தை அழித்தொழிப்பேன் என உறுதிபூண்டு அவ்வாறே செய்து முடித்தான். பரசுராமன் பற்றிய இச்செய்தினை,

**மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்**

**முன்முயன் றரிதினின் முடித்த வேள்வி (அகம்220:5-6)**

என்று அகநானூறு கூறுகிறது.

- மனிதனின் பேராசை
- மனிதன் மனிதனை ஆளுதல்
- மனிதனின் குணங்கள்
- மனிதனின் வஞ்சக எண்ணங்கள்

ஆகியவற்றை எடுத்துரைக்கும் அவதாரத்தின் குறியீடாகப் பரசுராமர் அவதாரம் காட்சியளிக்கிறது.

**இராமன் அவதாரம் :**

வாமன அவதாரம் எடுத்து உலகம் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானவை என்றும் பரசுராமர் அவதாரம் எடுத்து மனிதன் மனிதனை அழித்துக் கொல்லுவதனையும் உணர்த்தினார். ஆனால் மனிதன் மாறுவானா? எனவே மனிதன் எப்படி வாழ வேண்டும் என்ற அறத்தினை மனிதனுக்கும், உலகத்திற்கும் எடுத்துரைப்பதற்காகவே இராமன் என்னும் மனித அவதாரம் எடுத்தார். இராமஅவதாரம் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள அனைத்து இன்பத்துன்பங்களையும் எடுத்துரைக்கின்றது. இல்லற வாழ்க்கையின் சிறப்பையும், உயர்வையும் கூறுகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற

அன்பின் வெளிப்பாட்டைப் பறைசாற்றுகின்றது. தம்மைச் சுற்றியுள்ள விலங்குகள், பறவைகள், இயற்கையுடன் இணைந்து வாழும் பாத்திரமாகவும், மொத்த மனித வாழ்க்கையின் உருவமாக இராமன் காட்சியளிக்கிறான்.

தசரத மன்னனின் மகனாக இராமன் பிறக்கின்றான். இளமையிலே அன்னைகள், தம்பிகள், உறவினர்களின் அன்பினை பெறுகின்றான். சீதையை மணந்து காதலில் மூழ்குகின்றான். தந்தையின் கட்டளையை ஏற்று கானகம் செல்கிறார். இணைப்பிரியாப் பறவையினைப் போல் சீதையும் உடன் செல்கிறார். கானகத்தில் இராவணன் கவர்ந்து சென்று விடுகிறான். விலங்குகள், பறவைகள் துணைக் கொண்டு காடு, மலை, கடல் கடந்து இராவணனைக் கொன்று சீதையினை மீட்டு அன்பு என்னும் அரியனையில் அமர்கின்றான். இக்காட்சியை,

**கடுந்தெற லிராம னுடன்புணர் சீதையை**

**வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை**

**நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்**

**செம்முகப் பெருங்கிளையிழைப்பொலிந் தாஅங்கு (புறம்378:18-21)**

என ஊன்பொதிப்பசுங்குடையார் புலப்படுத்துகிறார். இராமன், இராவணனை வெல்லுதற்குச் செய்யும் போர் பற்றிய அரிய மறைச்செய்தியைக் கடற்கரையின்கண் ஆலோசித்துக் கொண்டிருந்தபோது பறவைகள் அதற்கு இடையூறு பயக்கும் வகையில் ஆலமரத்திருந்து ஆரவாரித்துக் கொண்டிருந்தன. ஆலோசனைக்கு இடையூறு புரிந்து கொண்டிருந்த பறவைகளின் பேரொலியை இராமன் கைகவித்து அவித்தான். இவ்வுண்மை,

**வென்வேற் கவுரியர் தொன்முது கோடி**

**முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை**

**வெல்போ ரிராம னருமறைக் கவித்த**

**பல்வீ ழாலம் போல**

**ஒலியவிந் தன்றிவ் வழுங்க லூரே (அகம்70:13-17)**

எனவரும் அகநானூற்று பாடலடிகளால் புலனாகிறது.

- மனிதனின் தான் என்ற ஆணவமும் கர்வமும்
- மனிதனின் வாழ்க்கை அமைப்பும் முறையும்
- ஆண் பெண்ணின் அன்பும் காதலும்
- உடன்பிறப்புகளின் பாசமும் உணர்வும்
- வாழ்க்கையின் போரட்டமும் வெற்றியும்
- ஆகிய கருத்துக்களை இராமனின் அவதாரம் குறியீடாகக் குறிப்பிடுகின்றது.

**பலராமன் அவதாரம் :**

இராமன் உருவத்தில் மனிதனின் வாழ்க்கையினை எடுத்துக் காட்டினார். மனிதன் வாழ்வதற்கு வழிகாட்டும் உருவமாக பலராமன் திகழ்கின்றார். பலராமன் கையில் ஏர்கலப்பை வைத்திருப்பார். பலராமரின் கொடி பனைக்கொடி ஆகும். திருவள்ளுவர் உழவுத்தொழிலினை,

**ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்**

**வாரி வளங்குன்றிக் கால் (குறள்14)**

என்று குறிப்பிட்டுள்ளார். மழைப் பெய்யாவிட்டால் உழவுத் தொழிலினை மேற்கொள்ள முடியாது அதனைப் போன்று மனிதன் மாற்றம் கொள்ளாவிட்டால் இவ்வுலகம் அழிந்துவிடும். ஏர்கலப்பை மண்ணைக் கிளர்ந்து புதிய மண்ணை மேற்கொண்டு வந்து நிலத்தினை செழிப்பாக்கும். அதனைப்

போன்று மனிதன் உலகத்தினை கிளர்ந்து உலகத்தோடு வாழ்தல் வேண்டும். இல்லையென்றால் அழிந்துவிடுவான். பனைமரம் நீரினைச் சேகரித்து நில வளத்தினைக் காக்கும். மனிதனும் நீர்வளத்தினையும் நிலவளத்தினையும் பாதுக்காத்தல் வேண்டும். மனிதனும் இயற்கையை மேம்படுத்தி உலகத்தினைக் காத்து வாழ்தல் வேண்டும் என்ற உயர்ந்த கருத்தினைப் பலராமன் அவதாரம் எடுத்துரைக்கின்றது.

வசுதேவரின் முதல் மனைவி ரோகிணிக்கு மகனாக பலராமன் பிறக்கின்றார். பலராமர் கிருட்டிணனுக்கு அண்ணனாகவும் திகழ்கின்றார். பலராமர் கோபம் மிகுந்தவராகச் சங்க பாடல்கள் குறிப்பிடுகின்றன. அவர் நினைத்து இருந்தால் பாண்டவர் கௌரவர் இடையேயான பூசலையும் போரினையும் தடுத்திருக்கலாம். ஆனால் பாண்டவர் கௌரவர் பிரச்சினையில் தலையிடாமல் ஒதுங்கி கொண்டு அறத்தினை நிலைநாட்டுகின்றார். சங்கக்காலத் தமிழக மக்கள் சிவன், பலராமன், திருமால், முருகன் ஆகிய நால்வரையும் சிறப்பிற்குரிய தெய்வங்களாகக் கருதி வழிப்பட்டனர் எனப்புறநானூற்றுப்பாடல் குறிப்பிடுகின்றது.பிறிதொரு புறநானூற்றுப்பாடல் பலராமனையும் மாயோனையும் இருபெருந் தெய்வங்கள் எனக் கூறுகிறது. இவ்வுண்மை,

**பானிற வுருவிற் பனைக்கொடி யோனும்**

**நீனிற வுருவி னேமி யோனுமென்று**

**இருபெருந் தெய்வமு முடனின் நாஅங்கு (புறம்56:14-16)**

என்னும் செய்யுளடிகளால் புலப்படுகிறது. இவற்றால் தொடக்க காலத்தில் மாயோனும் பலராமனும் தனித்தனித் தெய்வங்களாகக் கருதப்பெற்றனர் என்றும், பின்பு பலராமன் மாயோனின் ஒருவடிவமாகக் கருதப்பெற்றான் என்றும் கொள்வது பொருந்தும். மாயோனும் பலராமனும் ஒருவரேயாவர் என்னும் கருத்தும் அன்றே மக்களிடத்து நிலவியது.

**ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை**

**தீயுமிழ் திறனொடு முடிமிசை அணவர**

**மாயுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனிச்**

**சேயுயர் பணைமிசை எழில்வேழம் ஏந்திய**

**வாய்வாங்கும் வளைநாஞ்சில் ஒருகுழையொருவனை(பரி 1:1-5)**

என்னும் பரிபாடல் பாடலடிகளால் இதனை அறியமுடிகிறது. இவ்விருவருள் மூத்தவர் யார் இளையவர் யார் எனப் பிறிதொரு பரிப்பாடல் செய்யுள் வினவும். திருமாலும் பலராமனும் வண்ணத்தால் மாறுபட்டிருப்பினும் தொழிலால் ஒன்றுபட்டே விளங்குகின்றனர். இக்கருத்து,

**சிறந்தது, கல்லறை கடலுங் கானலும் போலவும்**
**புல்லிய சொல்லும் பொருளும் போலவும்**
**எல்லாம், வேறுவேறு உருவின் ஒருதொழிலிருவர் (பரி 15: 11-13)**

என்னும் இளம்பெருவழுதியார் பாடலால் தெளிவாகிறது. திருமாலும் பலராமனும் தொழிலால் ஒன்றுபட்டு விளங்குவதால்தான் பலராமனுக்குரிய கொடிகள், படைக்கருவிகள் முதலியன மாயோனுக்கும் உரியனவாகக் கடுவனிளவெயினனாரும், இளம்பெருவழுதியாரும் குறிப்பிடுகின்றனர். பலராமன் வெண்ணிறம் பொருந்தியவன். பலராமன் தன்கொடியாகப் பனைக்கொடியை உடையவன். பொலம்பனைக் கொடியோன்,வானுற வோங்கிய வயங்கொளிர் பனைக்கொடிப்பானிற வண்ணன், பனைக்கொடியோன் என்ற தொடர்கள் அவனுக்குரிய பனைக்கொடியைக் குறிப்பிடுகின்றன. பலராமனுடைய படை கலப்பையாகும். அவனுக்குரிய கலப்பைப் படையைச் சங்க இலக்கியங்கள் வாய்வாங்கும் வளைநாஞ்சில்,வளைவாய் நாஞ்சில்,வள்ளணி வளைநாஞ்சில், கொடுமிடல் நாஞ்சிலான், அடல்வெந்நாஞ்சில் என்று சிறப்பிக்கின்றன. பலராமன், கலப்பைப் படையுடன் தண்டையும் படையாகக் கொண்டிருந்தான். ஒற்றைக் குழையைப் பலராமன் அணிந்திருந்தான். இதனை, ஒருகுழை யொருவன், ஒருகுழையவை, ஒருகுழையவன் என்னும் வரிகள் விளக்கும். சங்ககாலத்தில் வலிமைக்கு எடுத்துக் காட்டாகப் பலராமனைக் கொண்டனர். இதனை, வலியொத்தீயே வாலியோனை என்னும் புறநானூற்றுப்

பாடலடியால் அறியமுடிகிறது. பலராமன் பலதேவன், வாலியோன் என்னும் பெயர்களாலும் குறிக்கப் பெற்றான். இத்தகைய பலராமன்,

- மனிதனின் வலிமை
- மனிதனின் நன்மைகள்
- மனிதனின் தீமைகள்
- மனிதனின் பொறுமை
- மனிதனின் வாழ்க்கை

ஆகியவற்றினை எடுத்துரைக்கும் குறியீடாகப் பலராமன் அவதாரம் திகழ்கின்றது.

**கண்ணன் அவதாரம் :**

ஓர் உருவில் வந்து எடுத்துரைத்தால் மனிதன் ஏற்றுக் கொள்ளவில்லை என திருமால் இரண்டு உருவங்களில் வந்து அருள்கிறார். பலராமனின் தம்பியாக கண்ணின் அவதாரம் காட்சியளிக்கிறது. இதுவரை எடுத்த அவதாரங்களில் பேசும் பொருளாகக் கண்ணன் அமைகின்றான். உலகத்து உயிர்களின் பெருக்கத்தினைக் குறைப்பதற்கும், தர்மத்தினை நிலைநாட்டி அதர்மத்தினை அழிக்கவும், வாழ்வியலின் பொருளை எடுத்திரைக்க குழந்தைப்பருவ விளையாட்டுகளும், குமரப்பருவ விளையாட்டுகளும், மகிழ்ச்சியும் சூழ்ச்சியும் செய்தான். வாழ்க்கைப்போரில் இன்பத்தினையும் துன்பத்தினையும் உணர்த்துகின்றான். மனிதனின் ஆசைகளாகிய மண்ணாசை, பெண்ணாசையை எடுத்துக் கூறுகின்றான். மனிதப் பிறவியின் பந்தம், பாசம், பற்றினை அழிக்கும் கருவியாக பழிவாங்கும் எண்ணமும், கோபமும் திகழ்கின்றது. இவை அனைத்தினையும் உடனிருந்து இரசிப்பவனாகவும், அழிப்பவனாகவும் கண்ணன் காட்சியளிக்கின்றான்.

கம்சன் என்னும் அரக்கனை அழிக்க வசுதேவருக்கும் தேவகிக்கும் எட்டாம் மகனாகப் பிறக்கிறார் கண்ணன்.ஆயர்பாடியில் நந்தகோபன், யசோதையிடத்து வளர்ந்து வருகின்றார். வசுதேவர் ஆயர் என்பதால் கண்ணனும் ஆயர்குலத் தோன்றலாகத் திகழ்கின்றார். கண்ணனின் குழந்தைப்பருவ குறும்புத்தனமும், குமரப்பருவத்தின் காதல் விளையாட்டுகளும் அங்குள்ள மக்களுக்கு விருந்தாகின்றது.கம்சன் கண்ணனை அழிக்க பல்வேறு முயற்சிகளை எடுக்கிறான். கண்ணனைக் கொல்ல முடியவில்லை. மக்களுக்கு பல்வேறு துன்பங்களை அளிக்கும் கம்சனை கண்ணன் கொல்கிறான்.கம்சனைக் கொன்று சில ஆண்டுகளுக்குப் பிறகுப் பூமியின் பாரத்தைப் போக்குவதற்குப் பாண்டவர், கௌரவர் உறவினராகக் கண்ணன் வருகின்றான். பாண்டவர் தர்மம் என்னும் அறத்தினைக் கடைப்பிடிப்பதாகவும் கௌரவர் அதர்மம் என்னும் ஆணவத்தினைக் கடைப்பிடிப்பதாகவும் கருதி இருபிரிவினற்கும் போர் உருவாகின்றது. போரில் பாண்டவர் உடனிருந்து எல்லோரையும் அழித்து விடுகிறார். உறவுகளைக் கொன்ற தவற்றினை உணர்ந்து பாண்டவர் அழிய தானும் அழிந்து விடுகிறார். கண்ணனைக் கொல்வதற்குக் கம்சன் போன்ற பகைவரால் ஏவப்பட்டுக் குதிரை வடிவில் போந்த தன்னுடன் பொருத கேசி என்னும் அசுரனை அழித்தவன்.இச்செய்தினைக் கூந்தல் என்னும் பெயரோடு கூந்தல் எரிசினங் கொன்றோய் எனக் கடுவன்இளவெயினனாரும் மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை வாய்பகுத்திட்டுப் புடைத்தஞான்றின் அன்கொல் மாயோன் எனச் சோழன் நல்லுருத்திரனாரும் புலப்படுத்துவர்.

ஆயமகளிர் தம் ஆடைகளை அவிழ்த்துக் கரையில் வைத்து விட்டுத் தொழுநையாற்றில் நீராடினர். கண்ணன், கரையில் வைக்கப்பட்டிருந்த அவர்தம் ஆடைகளைக் கவர்ந்துகொண்டு நீர்த்துறைக்கு அருகிலுள்ள குருந்த மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டான். ஆயமகளிர்க்கு உடுத்திக்கொள்ள ஆடைகள் தேவைப்பட்டபோது குருந்த மரத்தின் கொம்பைத் தம் திருவடிகளாலே தாழ்த்தி, அக்கொம்பிலுள்ள தண்ணிய தழைகளை ஆடைகளாக உடுத்திக் கொள்ளுமாறு செய்தான். இந்நிகழ்ச்சியை,

**வடாஅது வண்புனற் றொழுநை வார்மண லகன்றுறை**

**அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்**

**மரஞ்செல மிதித்தமா அல்போல** *(அகம் 59 3 -6)*

என்று அகநானூறு தெரிவிக்கின்றது. கண்ணன் ஆயமகளிருடன் இடமாகவும் வலமாகவும் ஆடியமையையும், தம்தலையிலும் தோளிலும் குடத்தை வைத்துக்கொண்டு ஆடியதை, இடவல குடவல கோவல காவல என்று கடுவன்இளவெயினனார் குறிப்பிடுகின்றார். மாங்குடி மருதனார், மதுரைக் காஞ்சியில் கண்ணன் அனைத்துப் பொருள்களாக விளங்குவதையும், பகவத்கீதையை அருளிச் செய்தமையையும் குறிப்பாக உணர்த்துகிறார். இதனை,

**தொல்லாணை நல்லாசிரியர்**

**புணர்கூட் டுண்டபுகழ்சால் சிறப்பின்**

**நிலந்தரு திருவின் நெடியோன்** *(மதுரை. காஞ்சி 761-763)*

என்னும் பாடலடிகளால் உணரமுடிகிறது. திருமாலின் திருவடிவங்கள் பத்தனுள்ளும் இராமனும் கண்ணனுமே சிறப்பிடம் பெற்றனர் என்று கருதுவது பொருந்தும். தமிழகத்தில் இவ்விருவர்க்கும் எடுக்கப்பெற்றுள்ள பெரும் அளவிலான கோயில்களைக் கொண்டும் வழிபாடுகளைக் கொண்டும் இதனைத் தெளியலாம்.

**ஒரே ஆண்டவனே பத்து வடிவில் தோன்றினுங்கூட**

**அப்பத்து வடிவிலும் கிருஷ்ணன் என்ற கண்ணனுக்கும்**

**இராமனுக்கும் அளிக்கப்பட்டுள்ள நிலை மற்ற**

**எட்டுத்தோற்றங்களுக்கும்கொடுக்கப்படவில்லை** *(செல்வக்களஞ்சியம்-ப.53)*

என்னும் கா.நடராசசர்மா, வ.கா.கிருஷ்ணசுவாமி ஆகியோர்தம் கூற்றும் இதனை மெய்ப்பிக்கின்றது.இராமன், கண்ணன் ஆகிய இவ்விருவருள்ளும் கண்ணனே மிகுந்த சிறப்பினைப் பெற்றுத் திகழ்கிறான். அன்னைத்திந்திய அளவிலான கண்ணன் வழிபாடும் இக்கருத்தினை மெய்ப்பிக்கின்றது. கண்ணன் அவதாரமே திருமாலுடைய அவதாரங்களுள்ளே மிகவும் பூரணமான அவதாரமெனப்படுகிறது. என ஆ.வேலுப்பிள்ளையும்,இறைவன் மனிதனாக வாழ்ந்து காட்டிய அவதாரங்களுள் கிருஷ்ண அவதாரம் மிகவும் விசேஷமானது எனக் கே.ஆர்.சேதுராமனும் இதற்கு உடன்படுவர். முல்லைநிலத் தெய்வமாகிய மாயோன் பத்துத் திருவடிவங்கள் எடுத்தபோதும் அவற்றுள் தானாக விளங்கும் திருவடிவம் கண்ணன் திருவடிவமேயாகும், மாயோன் என்னும் திருப்பெயரும் கண்ணன் என்னும் திருப்பெயரும் கருநிறமுடையவன் என்னும் ஒரு பொருளையே உணர்த்துகின்றன. இலக்கியங்களும் இருவரையும் ஒன்றாகக் கருதியே பாடுகின்றன. மரஞ்செல மிதித்த மாஅல் எனவரும் அகநானூற்றுப் பாடல் வரிகள் கண்ணன் பற்றிய செய்தியைக் கூறும்போது கண்ணனை மால் எனவே குறிக்கின்றது. பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலியவையும் இவ்விருவரையும் ஒருவராகவே கருதுகின்றன. கண்ணன் திருமாலின் அவதாரம். தமிழ்நாட்டில் முல்லைநிலத் தெய்வமாகக் கூறப்படுபவன் மாயோன். அம்மாயோனே திரிமாலாகவும் விஷ்ணுவாகவும், கண்ணனாகவும் காட்சித் தருகின்றான். திருமாலின் தானாக விளங்கும் திருவடிவம் கண்ணன் திருவடிவேயோகும். “மாயோன் மேய காடுறை யுலகமும்” என்ற சான்றோர் வாக்கின்படி, முல்லைக்கு உரிய தெய்வம் மாயோன் ஆவான். அதிலும் மாயோனின் அவதாரமாகிய கண்ணனையே ஆயர்கள் பெரிதும் போற்றி வழிபட்டு வந்தனர். கண்ணன் திருமாலின் அவதாரமாவதுடன் தம் இனத்தோடு வாழ்ந்த தம்குடி மரபின்படி ஒழுகி வந்ததால், ஆயர்களுக்குக் கண்ணன் வடிவில் மாயோனை வழிபடுவதிலே ஒரு தனித்த மனநிறைவு உண்டு என்றும் கூறலாம். கோகுலத்திலே வளர்ந்து, வெண்ணெய் திருடி உண்டு, ஆநிரைமேய்த்து, இராதையின் காதலனாக விளங்கிய கண்ணனை, ஆயர் போற்றியதில் தெய்வ பக்தியுடன், இனப்பற்றும் கலந்து ஒளி வீசுகின்றது என்றே கருதலாம். இத்தகைய கண்ணன் அவதாரம்,

- மனிதனின் போட்டியும் பொறாமையும்
- மனிதனின் பதவி ஆசை
- மனிதனின் உரிமை போர்
- மனிதனின் மண்ணாசையும் பெண்ணாசையும்
- மனிதனின் துன்பமும் அழிவும்

ஆகியவற்றை குறியீடாகக் கண்ணனின் அவதாரம் உணர்த்துகின்றது.

**கல்கி அவதாரம் ( நிகழும் பொழுது) :**

குதிரை மேல் அமர்ந்து வருவதாக கல்கி அவதாரம் நிகழும். கடலால் தோன்றி, கடலால் வாழும் உயிரினங்கள் அனைத்தும் மனிதனால் அழியும். மனிதனின் பேராசை, தன்னையும் மற்றவர்களையும் அழிக்கும். ஆட்சி, அதிகாரம் அனைத்தினையும் அழிக்கும். உலக உயிரினங்கள் அழிந்து புதிய உயிரினத்தின் தோற்றமாக கல்கி அவதாரம் அமையலாம். குதிரை எவ்வாறு வேகமாக ஓடுகின்றதோ அதனைப் போன்று உலகம் வேகமான அழிவின் பாதையில் செல்லும். மனிதனிடத்து ஆசை, பயம், நோய்கள் பெருகும். போர் சண்டைகள் தொடங்கி உயிர்கள் அழியும். களவு காமம் பெருகி கொலைக், கொள்ளை அதிகரிக்கும். பசி, பஞ்சம் ஏற்படும். ஓரறிவு முதல் ஆறறிவு வரை அனைத்தும் அழிந்து விடும். உலக அழிவின் அவதாரமாக கல்கி நிகழலாம்.

- உலகம் வேகமாக அழிவின் பாதையில் செல்லுதல்
- உலகில் போர்களும் சண்டைகளும் நிகழுதல்
- உலகில் இயற்கைச் சீற்றங்களும் அழிவுகளும் நிகழுதல்
- ஊழிக்காலம் தோன்றுதல்
- பூமியினைக் காத்தல்

ஆகியவற்றின் அவதாரமாக கல்கி அவதாரம் தோன்றலாம்.

**முடிவுரை :**

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான். (குறள் 972)**

என்னும் திருவள்ளுவரின் சொல்லிற்கிணங்க இந்த உலகம் அனைத்து உயிரினங்களுக்கும் உரியதாகும். வாழ்க்கை வாழ்வதற்கே உரியது. அதனை திருமாலின் அவதாரங்கள் கூறுகின்ற கருத்தியல்களை மனதில் கொண்டு மகிழ்ச்சியாக வாழ்வோம். போர், சண்டை, சாதி, மத, இன பூசல்களை தவிர்ப்போம். மனிதனாய் வாழ்வோம் உலகத்தை நேசிப்போம். ஒவ்வொன்றும் ஏதோ ஒரு கருத்தினையே நமக்கு உணர்த்துகின்றது. திருமாலின் அவதாரங்களும் வாழ்க்கைக்கான குறியீடுகளை எடுத்துரைக்கின்றது. அதனைக் கருத்தில் கொண்டு உலகத்தோடு ஒன்றி வாழ்வோம். இயற்கையை வளர்ப்போம், பாதுகாப்போம், இயற்கையோடு வாழ்ந்து செல்வோம்.

**துணைநூற்பட்டியல் :**

1. ச.வே.சுப்பிரமணியன் — சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும் மாணிக்கவாசகர் பதிப்பகம்
2. தி.வே.விஜயலட்சுமி - இலக்கிய ஆய்வுகள் மாணிக்கவாசகர் பதிப்பகம்
3. கதிர்முருகு — சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் உரையும் சாரதா பதிப்பகம்
4. புலியூர்கேசிகன் - சங்க இலக்கியம் மூலமும் உரையும் சாரதா பதிப்பகம்
5. கா. விஜயரத்தினம் - சங்கக்கால தமிழர் வாழ்வியல் மணிமேகலை பதிப்பகம்
6. சாமி சிதம்பரனார் - தமிழர் வாழ்வும் பண்பாடும் சாரதா பதிப்பகம்
7. நாமக்கல் கவிஞர் உரை - திருக்குறள்

பூம்புகார் பதிப்பகம்
8. பொ.வே. சோமசுந்தரனார் - அகநானூறு
கழக வெளியீடு
9. பொ.வே. சோமசுந்தரனார் - பரிபாடல்
கழக வெளியீடு
10. கா. நடராச சர்மா - செல்வக்களஞ்சியம்
செயகுமாரி நிலையம்

***<u>Supplementary Material :</u>***

1. S.V. Subramanian — Sangam Literature through Ten Poems and Explanations
Manickavasagar Publishing House
2. T.V. Vijayalakshmi — Literary Studies
Manickavasagar Publishing House
3. Kathirmurugu — Sangam Literature through Ten Poems and Text
Sharatha Publishing House
4. Puliyurkesigan — Sangam Literature through Ten Poems and Text
Sharatha Publishing House
5. K. Vijayarathnam — Life of Tamils in the Sangam Period
Manimekalai Publishing House
6. Sami Chidambaranar — Life and Culture of Tamils
Sharatha Publishing House
7. Namakkal Poet Text — Thirukkural
Poompuhar Publishing House
8. P.V. Somasundaranar — Akananuru
Publication
9. P.V. Somasundaranar — Paripadal
Publication
10. K. Nadarasa Sharma - Selvaklanjiyam
Seyakumari Nilayam

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com